# இரண்டாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 60

வகுப்பு - மூன்று

நேரம்: 2 மணி

I. அ) **சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 10 × 1 = 10

1. “மரங்களுடன் இருந்தால் தப்பித்திருக்கலாம்” என்று கூறியது ________________

அ) சிங்கம் ஆ) புலி இ) முயல் ஈ) மான்

2. வாழ்க்கையை நெறிப்படுத்த உதவுவது ________________

அ) கருணை ஆ) பொய் இ) பணம் ஈ) கல்வி

3. “ஓடைக்குள்ளே” - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

அ) ஓடை + உள்ளே ஆ) ஓடை + க்குள்ளே

இ) ஓ + உள்ளே ஈ) ஓடைக்கு + உள்ளே

4. வெப்பம் + ஆக - என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________________

அ) வெப்பமாக ஆ) வெப்பம்மாக இ) வேப்பமாக ஈ) வெப்பம்யாக

5. “சூழ்ச்சி” என்ற சொல்லுக்குக் கதையின் படி தொடர்புடைய விலங்கு ___________

அ) குரங்கு ஆ) முதலலை இ) முயல் ஈ) சிங்கம்

6. “ஒன்றுமில்லை” - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________________

அ) ஒன்று + இல்லை ஆ) ஒன்றும் + இல்லை

இ) ஒன்றுமே + இல்லை ஈ) ஒன்று + மில்லை

7. சிரமம் + படு - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ________________

அ) சிரமம்படு ஆ) சிரமப்படு இ) சிரமபடு ஈ) சிரமபாடு

8. ஒகேனக்கல் ________________ மாவட்டத்தில் உள்ளது.

அ) தருமபுரி ஆ) சேலம் இ) ஊட்டி ஈ) ஈரோடு

9. "மாட்டிக்கொண்டது" - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) மாட்டிக் + கொண்டது ஆ) மாட்டி + கொண்டது

இ) மாட்டு + கொண்டது ஈ) மாட்டி + க்கொண்டது

10. "அறிமுகம் + இல்லாதவர்கள்" - இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

அ) அறிமுகம்மில்லாதவர்கள் ஆ) அறிமுகமில்லாதவர்கள்

இ) அறிமுகம் இல்லாதவர்கள் ஈ) அறிமுகமல்லாதவர்கள்

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 × 1 = 5

11. "இந்தியாவின் நயாகரா" என்று அழைக்கப்படுவது ________________

12. அழிவு இல்லாத சிறந்த செல்வம் ________________

13. நீதி தேவதையாக உருமாறிய பறவை ________________

14. திருக்குறளை எழுதியவர் ________________

15. ஒகேனக்கல் என்பதற்கு ________________ என்று பொருள்.

**II. அ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ச்சொல் எழுதுக.** 4 × 1 = 4

16. வேகமாக 17. துன்பம் 18. தோற்றம் 19. நண்பன்

**ஆ) பின்வரும் சொற்களுக்கு பொருள் கூறுக.** 4 × 1 = 4

20. சோர்வு 21. அறம் 22. விவாதம் 23. நனைந்த

**இ) பொருத்துக.** 4× 1 = 4

24.. கழுதை - எலும்பு

25. புலமை - கருப்புப்பட்டை

26. என்பு - அறிவு

27. நாய் - உப்புமூட்டை

**III. பின்வரும் குறட்பாக்களை அடிமாறாமல் பிழையின்றி எழுதுக.** 2 × 2 = 4

28. 'ஞாலம்' 'கேடில்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

IV. **பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு விடையளி.** 6 × 2 = 12

29. பாலைவனத்தில் என்ன நடந்தது?

30. கண்ணதாசன் வாழ்வில் உயரக் காரணமாக இருந்தது எது?

31. பாட்டியிடம் ஓணான் கேட்டது என்ன?

32. ஒகேனக்கல் அருவியில் நீர் விழும் காட்சி பார்ப்பதற்கு எப்படி இருந்தது?

33. நாய் ஓநாயை எங்கு வரச்சொன்னது?

34. ‘நட்பே உயர்வு’ கதையில் முதலையின் திட்டம் யாது?

35. தோட்டக்காரன் ஓணானிடம் என்ன கூறினான்?

V. **பின்வரும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடை எழுதுக.** 1 × 5 = 5

36. உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் இரண்டு நாட்கள் விடுப்பு வேண்டி உன் வகுப்பாசிரியருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.

37. விடுமுறையில் நீ சென்ற சுற்றுலா பற்றி எழுதுக.

VI. **அ) பின்வரும் வினாக்கள் அனைத்திற்கும் விடை எழுதுக.** 10 × 1 = 10

38. படித்துவிட்டால் __________ தொழிலை விட்டு விடலாம். (இழிவான / இளிவான)

39. தட்டு தங்க தட்டு; தகதகக்கும் வெள்ளித் தட்டு தலைக்கு மேல் உலாவரும். அது என்ன? (புதிருக்கு விடை எழுதுக.)

40. நட்பு கூடா முடியும் கேடாய். (முறை மாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுக.)

41. தூக்கம் __________, மூட்டு __________ (இதிலுள்ள நெடிலைக் குறில் ஆக்கி எழுதுக.)

42.
<table><tr><td rowspan="2">நூ</td><td>ல்</td><td rowspan="2">க</td><td>ண்</td><td rowspan="2">டு</td></tr><tr><td>ள்</td><td>ன்</td></tr></table>

__________ (சரியான எழுத்தை இணைத்து எழுதுக.)

43. ஆகா என்ன சுகம் தெரியுமா (இத்தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியிடுக.)

44. ஓநாயின் கழுத்தில் கருப்புப்பட்டை இருந்தது. (சரியா /தவறா கூறுக)

45. செ___ ___ருத்தி, ஆ ___ ___ (இச்சொற்களில் விடுபட்ட இடங்களில் சரியான இன எழுத்துகளை எழுதுக.)

46.  

(படங்களை இணைத்துச் சொல்லை எழுதுக.)

47. தக்கார் __________ என்பது __________

__________ காணப் __________

**ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் உள்ள ஏதாவது ஓர் எழுத்தைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக.** 2 × 1 = 2

48. கரும்பு

49. பாசம்